சூதாட்டமாக மாறிய டெல்டா விவசாயம்!

First Published : 03 Jan 2011 12:00:00 AM IST



கடலூர், ஜன. 2: தமிழக அரசின் நீர் மேலாண்மைக் குறைபாடுகள் காரணமாக, காவிரி டெல்டா பாசன விவசாயம் ஆண்டுதோறும் சூதாட்டமாக மாறியிருக்கிறது. அதாவது ஒன்று தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் அல்லது அதிகப்படியான மழை நீரால் பயிர்கள் சேதமடையும்.

வெள்ளப் பாதிப்பு காலங்களில் கடலூர் மாவட்ட விவசாயிகளுக்கு ஏற்படும் நஷ்டம் ரூ. 200 கோடியைத் தாண்டும்.

தமிழகத்தில் 11 மாவட்டங்களைச் சேர்ந்த 16.5 லட்சம் ஏக்கர் நிலங்கள் காவிரி நீரை நம்பி இருக்கின்றன. கடலூர் மாவட்டத்தில் 1.5 லட்சம் ஏக்கர் நிலங்கள் காவிரி பாசனப் பகுதிகளாகும். டெல்டா மாவட்டங்களில் உற்பத்தியாகும் நெல்தான், தமிழகத்தின் அரிசி விலையை நிர்ணயிக்கிறது.

கடலூர் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளச் சேதங்களுக்கு இழப்பீடு வழங்குவது தொடர் கதையாகி விட்டது. 2005ல் ரூ. 44 கோடியும், 2008-ல் ரூ. 36 கோடியும் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு முதல்கட்டமாக ரூ. 23 கோடி வழங்கப்பட்டு உள்ளது.

முந்தைய ஆண்டுகளைவிட இவ்வாண்டு இழப்பீடு அதிகமாகும் என்கிறார்கள் அதிகாரிகள். இந்த இழப்பீட்டுத் தொகைகள் விவசாயிகளின் இழப்புக்கு, எந்த வகையிலும் ஈடாக முடியாது. நெல்லுக்கு இழப்பீடு 2005 மற்றும் 2008 ம் ஆண்டுகளில் ஏக்கருக்கு ரூ.3 ஆயிரம் வழங்கப்பட்டது.

இவ்வாண்டு ரூ. 4 ஆயிரமாக உயர்த்தப்பட்டு உள்ளது. டெல்டா நிலங்களில் ஒரு ஏக்கருக்கு சாகுபடிச் செலவு ரூ. 14 ஆயிரம். மகசூல் மதிப்பு, பயிர் காப்பீட்டு நிறுவனக் கணக்குப்படி ரூ. 24 ஆயிரம். ஒரு டி.எம்.சி. நீரில் 6 ஆயிரம் ஏக்கரில் சம்பா நெல் சாகுபடி செய்ய முடியும் என்கிறார்கள் விவசாயிகள்.

எனவே காவிரி டெல்டா பாசன நிலங்களுக்கு, சம்பா சாகுபடிக்கு 170 டி.எம்.சி. தண்ணீர் தேவை. மேட்டூர் அணையின் கொள்ளளவு 94 டி.எம்.சி. எனவே அணை இருமுறை நிரம்பினால், 16.5 லட்சம் ஏக்கர் நிலங்களில் சம்பா சாகுபடியை, நிறைவாகச் செய்யலாம். அரசு முறையாக நீர் மேலாண்மை செய்தால், இதை எளிதாக நிறைவேற்ற முடியும் என்கிறார்கள் விவசாயிகள்.

மேட்டூர் அணைக்கு இயல்பாகக் கிடைக்கும் நீர், நீதிமன்ற உத்தரவுகளின்படி கர்நாடகத்திடம் பெறவேண்டிய நீர், ஆகியவற்றைக் கணக்கிட்டு, உரிய காலத்தில் மேட்டூர் அணையைத் திறந்து, கடைமடைப் பகுதிவரை குறித்த காலத்தில் நீர் கிடைக்கச் செய்தல் உள்ளிட்ட நீர் மேலாண்மையை மேற்கொள்வதன் மூலம், 16.5 லட்சம் ஏக்கர் நிலங்களையும் பொன் விளையும் பூமியாக மாற்ற முடியும் என்கிறார்கள் முன்னோடி விவசாயிகள்.

கடலூர் மாவட்டத்தில் இந்த ஆண்டு மழை வெள்ளத்தால் 70 ஆயிரம் ஏக்கர் நெல் பயிர் அழிந்து விட்டது. வீராணத்தின் துணை ஏரிகளான வாலாஜா ஏரி, பெருமாள் ஏரி பாசனப் பகுதிகளில், 30 ஆயிரம் ஏக்கர் நிலங்கள், வெள்ளத்தில் மூழ்கி சாகுபடி செய்ய முடியாத நிலை அல்லது கதிர் முற்றும் நேரத்தில் தண்ணீர் பற்றாக்குறை என்ற பரிதாப நிலைக்குத் தள்ளப்படுகிறது.

கடலூர் டெல்டா பாசனப் பகுதிகளில் வடிகால் வசதிகளை மேம்படுத்தாததும், வீராணம் ஏரியில் முறையாக நீர் மேலாண்மை செய்யாததுமே, கடலூர் மாவட்ட பயிர் பாதிப்புகளுக்குக் காரணம்.

இவ்வாண்டு கடைமடைப் பகுதிகளுக்கு தண்ணீர் தாமதமானதே, 50 ஆயிரம் ஏக்கரில் 15 முதல் 25 நாள் நெல் பயிர்கள் நீரில் மூழ்கி அழுகக் காரணம் என்கிறார் மாவட்ட உழவர் மன்றங்களின் கூட்டமைப்பின் தலைவர் பி.ரவீந்திரன் தெரிவித்தார்.

கடலூர் மாவட்ட டெல்டா பகுதிகளுக்கு காவிரி நீர் தாமதமாவதால், மழை வெள்ளத்தால் நெல் பயிர்கள் சேதமாவதுடன், 1 லட்சம் ஏக்கர் உளுந்து சாகுபடியும் இல்லாமல் போகிறது. கடலூர் டெல்டா விவசாயிகளுக்கு இந்த ஆண்டு நெல் பயிரில் நஷ்டம் ரூ.140 கோடி, உளுந்து சாகுபடியில் நஷ்டம் ரூ. 60 கோடி.

கர்நாடகத்திடம் நமது உரிமையக் கேட்டுப் பெறாததும், உரிய காலத்தில் காவிரி நீர் கிடைக்கச் செய்யாததும், சரியான நீர் நிர்வாகம் இல்லாததுமே இந்த நஷ்டத்துக்குக் காரணம் என்கிறார் ரவீந்திரன்.

**உளுந்து சாகுபடியில் உயர் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி**

First Published : 03 Jan 2011 04:57:37 AM IST

திண்டிவனம், ஜன. 2: திண்டிவனம் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையத்தின் சார்பில் ஆட்சிப்பாக்கம் கிராமத்தில் விவசாயிகளுக்கு உளுந்து சாகுபடியில் உயர் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி அண்மையில் நடைபெற்றது.

உளுந்து சாகுபடி விழுப்புரம் மாவட்ட விவசாயிகளால் அதிக பரப்பளவில் மேற்கொள்ளபட்டு வருவது, அப்பயிரின் மேல் விவசாயிகளுக்கு உள்ள ஆர்வத்தையும் வருவாயையும் பிரதிபலிப்பாக அமைகிறது.

கடந்த ஆண்டு கிடைத்த உளுந்தின் நிலை இவ்வாண்டு இச்சாகுபடியை மேற்கொள்ள உந்துதலாக அமைந்துள்ளது என ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் முனைவர் ராமமூர்த்தி கூறினார்.

விவசாயிகளுக்கு உளுந்தில் அதிக விளைச்சல் பெற்றிட 10 உயர் தொழில்நுட்பங்களை நிகழ்ச்சியில் கூறினார்.

பருவத்துக்கேற்ற உயர் விளைச்சல் ரகங்களை உபயோகிப்பதாலும், தரமான மற்றும் முளைப்புத்திறன் உள்ள விதைகளை தயார் செய்தல் மூலமாகவும், விதை நேர்த்தி செய்தல், பயிர் எண்ணிக்கையை பராமரிப்பு செய்தல் (அதாவது 1 சதுர மீட்டருக்கு 33 செடி என்ற அளவில்), சரியான விதையளவு கடைபிடித்து வரிசை விதைப்பு செய்தல் மூலமாகவும், சீரிய உர மேலாண்மையை பின்பற்றுதல் மூலமாகவும், இலை வழி நுண்ணூட்டத்தில் கவனம் செலுத்துவதாலும், ஒருங்கிணைந்த களை மேலாண்மை பின்பற்றுவதாலும், ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை முறைகளை கடைபிடித்தலாலும், பண்ணை இயந்திரங்களை உபயோகித்தல் போன்ற முறைகளால் ஏக்கர் ஒன்றுக்கு 1000 கிலோ மகசூல் பெற முடியும் என்றார்.

இப்பயிற்சியில் உயர் உர விதை நேர்த்தி, வரிசை விதைப்பு போன்ற செயல்விளக்கங்கள் செய்யப்பட்டன.

ஆட்சிப்பாக்கம் ஏரிப்பாசனத் தலைவர் கோவிந்தராஜி வரவேற்புரை வழங்கினார். இப்பயிற்சிக்கு, வட்டார ஆராய்ச்சியாளர்கள் திரிபுரசுந்தரி மற்றும் பாரதி ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

**தமிழகத்தில் இன்று மழை வாய்ப்பு**

First Published : 03 Jan 2011 01:21:45 AM IST



சென்னை, ஜன. 2: தமிழகம், புதுவையில் திங்கள்கிழமை மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

வளிமண்டலத்தின் மேல் அடுக்குகளில் காற்றின் போக்கு மழைக்குச் சாதகமாக இருப்பதால் ஞாயிற்றுக்கிழமை தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் மழை பெய்தது.

அடுத்த 24 மணி நேரத்துக்கு கடலோர தமிழகம், புதுவை, உள்தமிழகம், கேரளம் உள்ளிட்ட பகுதிகளில் சில இடங்களில் மழை வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்தது.

சென்னையில்... நகரில் வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

குறைந்த பட்சம் 72 டிகிரி பாரன்ஹீட் வெப்ப நிலை பதிவாகும்.

மழை அளவு: ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி தக்கலையில் 130 மில்லி மீட்டர் மழை பெய்தது. நாகர்கோவில் 30, புனலூர், பேச்சிப்பாறை, திருநெல்வேலி மாவட்டம், சிவகிரியில் 10 மில்லி மீட்டர் மழை பதிவானது.

சென்னையில் மயிலாப்பூர், மந்தைவெளி, கிண்டி, திருவல்லிக்கேணி, சைதாப்பேட்டை, தியாகராயநகர், நுங்கம்பாக்கம், வேப்பேரி, திருமங்கலம், அம்பத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை இரவில் நல்ல மழை பெய்தது.

**மரபணுமாற்ற விதைகள்: மார்க்சிஸ்ட் தலைவர் ஆதரவு**

First Published : 03 Jan 2011 12:16:34 AM IST

திருவனந்தபுரம்,ஜன.2: மரபணுமாற்ற விதைகளை விவசாயிகள் பயன்படுத்துவதற்கு கேரள மார்க்சிஸ்ட் மூத்தத் தலைவர் ராமச்சந்திரன் பிள்ளை ஆதரவு தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் மரபணுமாற்ற விதைகளை சோதிக்கவும், பயன்படுத்தவும் கம்யூனிஸ்டுகள் கொள்கை ரீதியாக எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். குறிப்பாக கேரளத்தில் மரபணுமாற்ற நெல்லை தோட்டத்தில் சோதித்துப் பார்க்க அனுமதிக்கமாட்டோம் என்பதில் அந்த மாநில கம்யூனிஸ்ட் தலைவர்கள் உறுதியாக உள்ளனர்.

இதுபோன்ற நிலையில் மரபணுமாற்ற விதைக்கு கம்யூனிஸ்ட் தலைவர் ஒருவர் ஆதரவு தெரிவிப்பது இதுவே முதல்தடவை.

ராமச்சந்திரன் இவ்வாறு கூறியுள்ளதால் மரபணுமாற்ற விதை விவகாரத்தில் கம்யூனிஸ்டுகளின் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதோ என்று விவசாயிகள் நினைக்கத் தொடங்கியுள்ளனர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பாக திருவனந்தபுரத்தில் வேளாண்மை தொடர்பான 3 நாள் சர்வதேச மாநாடு நடைபெறுகிறது. இந்த மாநாட்டில் ஞாயிற்றுக்கிழமை கலந்து கொண்டு உரையாற்றிய மார்க்சிஸ்ட் தலைவர் ராமச்சந்திரன் பிள்ளை, மரபணுமாற்ற விதையை பயன்படுத்துவதற்கு ஆதரவு தெரிவித்துப் பேசினார்.

கேரளத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் விவசாயிகள் பிரிவுத் தலைவராகவும் ராமச்சந்திரன் பிள்ளை உள்ளார். இதனால் மரபணுமாற்ற விதைகளுக்கு அவர் ஆதரவு தெரிவித்துள்ளது முக்கியத்துவம் பெறுகிறது.

உலக அளவில் மக்கள் தொகை பெருகிவருகிறது. இதனால் உணவு தானிய தேவையும் அதிகரித்து வருகிறது. இதற்கேற்ப உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய கட்டாய சூழல் உள்ளது. பாரம்பரியமாக நாம் பயன்படுத்தும் விதைகளை பயன்படுத்துவதன் மூலம் உணவு தானிய உற்பத்தியை அதிகரித்துவிட முடியாது. மரபணுமாற்ற விதைகளால் மட்டுமே உற்பத்தியை அதிகப்படுத்துவது சாத்தியமாகும்.

இதைக் கம்யூனிஸ்ட் நாடான சீனா உள்ளிட்ட நாடுகள் புரிந்து கொண்டுள்ளன. மரபணுமாற்ற விதைகளைப் பயிரிட அனுமதி அளித்துள்ளன. இந்தியாவிலும் மரபணுமாற்ற விதைகளை பயன்படுத்துவதை தவறு என்று சொல்ல முடியாது. இதைக் கண்களை மூடிக்கொண்டு எதிர்ப்பு தெரிவிப்பதை மூடநம்பிக்கை என்றே சொல்ல வேண்டும்.

அதேசமயம் மரபணுமாற்ற விதைகளை பயன்படுத்துவதற்கு முன்னதாக அதை சோதனைக்கு உட்படுத்தி அதனால் சுற்றுச்சூழல், மனிதர்களுக்கு பாதிப்பு ஏற்படாது என்பதை உறுதி செய்ய வேண்டும்.

மரபணுமாற்ற விதையை ஒரு தடவை மட்டுமே பயிரிட முடியும். மீண்டும் பயிரிட விதையை தனியார் நிறுவனங்களிடம் இருந்தே விவசாயிகள் வாங்க வேண்டும் என்ற சூழல் உள்ளது. மரபணுமாற்ற விதைக்கு எதிர்ப்பு கிளம்பியுள்ளதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம். இதனால் மரபணுமாற்ற விதைகளை பொதுத் துறை நிறுவனங்கள் மூலமே விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய வேண்டும் என்றார் ராமச்சந்திரன் பிள்ளை.

வேளாண் அமைச்சர் எதிர்ப்பு: இதனிடையே, மரபணுமாற்ற விதைகளின் பயன்பாட்டை ஏற்க முடியாது என்று கேரளத்தின் வேளாண் அமைச்சர் ரத்னாகரன் தெரிவித்துள்ளார்.

மரபணுமாற்ற விதைகள் விவசாயத்துறைக்கு பயனைத் தரும் என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. அதனால் பாதிப்புதான் ஏற்படும். மரபணுமாற்ற விதைகளை பயன்படுத்த ஆரம்பித்தால்

அவை பாரம்பரியமாக பயன்படுத்தும் விதைகளை இருக்கும் இடம் தெரியாமல் ஆக்கிவிடும் என்பதில் சந்தேகம் இல்லை என்று ரத்னாகரன் குறிப்பிட்டார்.

**பூண்டி ஏரிக்கு நீர்வரத்து குறைவு**

First Published : 03 Jan 2011 12:00:00 AM IST



மொத்த உயரமான 35 அடி நீர்மட்டத்தை எட்டிய நிலையில் கடல் போல் காட்சியளிக்கும் பூண்டி ஏரி.

திருவள்ளூர், ஜன. 2: வடகிழக்குப் பருவமழை முடிந்ததை அடுத்து ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையில் இருந்து கிருஷ்ணா கால்வாய் வழியாக வரும் நீரின் அளவு குறைந்துள்ளது.

சென்னை குடிநீர் தேவையின் முக்கிய பங்கு வகிக்கும் பூண்டி ஏரியின் மொத்த அளவான 35 அடி உயரத்தில் கோடை வெப்பம் காரணமாக கடந்த சில மாதங்களுக்கு முன்பு வரை 26 அடி வரை நீர்மட்டம் குறைந்தது.

இந்நிலையில் கடந்த நவம்பர் மாதம் ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு உபரி நீர் திறந்து விடப்பட்டதை அடுத்து கிருஷ்ணா கால்வாய் வழியாக வினாடிக்கு 300 கனஅடி வரை நீர்வரத்து இருந்தது.

இந்நிலையில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை மற்றும் வடகிழக்குப் பருவமழை காரணமாக கிருஷ்ணா கால்வாயில் வினாடிக்கு 1200 கனஅடி வரை நீர்மட்டம் உயர்ந்தது. இதையடுத்து பூண்டி ஏரி வேகமாக முழு அளவை எட்டியதை அடுத்து உபரி நீர் மதகுகள் வழியாக ஆரணி ஆற்றுக்கு திறந்து விடப்பட்டது.

இணைப்புக் கால்வாய் வழியாக செங்குன்றம், செம்பரம்பாக்கம் ஏரிகளுக்கு வினாடிக்கு 800 கனஅடி நீர் வரை திறக்கப்பட்டது.

இதற்கிடையில் செம்பரம்பாக்கம், செங்குன்றம் ஏரிகள் நிரம்பியதால் பூண்டி ஏரியில் இருந்து இணைப்புக் கால்வாய் வழியாக வெளியேற்றப்படும் நீரும் நிறுத்தப்பட்டது. தற்போது

வடகிழக்குப் பருவமழை முடிவுக்கு வந்ததை அடுத்து கிருஷ்ணா கால்வாயில் நீர்வரத்து குறைந்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி கிருஷ்ணா கால்வாய் வழியாக வினாடிக்கு 356 கனஅடி நீர் வரத்தே உள்ளது.

பூண்டி ஏரியின் நீர்மட்டம் 35 அடியாக மொத்த உயரத்தை எட்டியுள்ள நிலையில் இணைப்புக் கால்வாய் வழியாக வினாடிக்கு 270 கன அடியும், மழலைக் கால்வாய் வழியாக வினாடிக்கு 40 கனஅடி நீரும் வெளியேற்றப்படுகிறது.

தொடர்ந்து கிருஷ்ணா கால்வாயில் நீர்வரத்து குறைந்தால் பூண்டி ஏரியின் நீர்மட்டமும் குறைய வாய்ப்புள்ளது என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ரூ. 15 ஆயிரம் இழப்பீடு வழங்க வலியுறுத்தல்**

First Published : 02 Jan 2011 11:57:53 AM IST

திருத்துறைப்பூண்டி, ஜன. 1: திருவாரூர் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ. 15 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும் என, செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலான விவசாயிகள் சங்க பேரவைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முத்துப்பேட்டையில் நடைபெற்ற இந்த பேரவை கூட்டத்திற்கு சங்கத்தின் ஒன்றியத் தலைவர் ஆர். ஜெயக்குமார் தலைமை வகித்தார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட கட்சியின் மாவட்ட செயற்குழு உறுப்பினர் பிஎன். தங்கராஜு, வட்டார செயலர் கே.வி. ராஜேந்திரன், மாவட்ட குழு உறுப்பினர் டி. சுப்பிரமணியன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், அண்மையில் பெய்த பலத்த மழையால் திருவாரூர் மாவட்டம் முழுவதும் பழுதடைந்துள்ள சாலைகளை சீரமைக்க வேண்டும். காவிரி டெல்டா விவசாயத்தைப் பாதுகாக்க தனி பாசன வடிகால் வாரியம் அமைக்க வேண்டும். பயிர்க் காப்பீட்டுத் தொகையை சரகம் வாரியாக கணக்கிடும் முறையை மாற்றி அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக் கூட்டத்தில் மாவட்டத் தலைவர் ஜி. சுந்தரமூர்த்தி, மாவட்ட பால் உற்பத்தியாளர் சங்கச் செயலர் பி. ரத்தினம், தென்னை விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் என்.ஜி. முருகையன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**பனியில் மலர்கள் கருகி வருவதால் கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவில்**

First Published : 02 Jan 2011 10:11:11 AM IST

புதிய ரக மலர்ச் செடிகள் நடும் பணி தொடக்கம்

கொடைக்கானல், ஜன. 1: கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவில் புதிய ரக மலர்ச் செடிகள் நடும் பணி தொடங்கியது.

கொடைக்கானலில் தற்போது பனிப் பொழிவு நிலவி வருவதால், பூங்காவில் உள்ள மலர்கள் கருகி வருகின்றன.

இந்நிலையில், மே மாத சீசனுக்கு பூங்காவை தயார் செய்ய வேண்டி இருக்கிறது. எனவே, கருகிய மலர்களை அகற்றிவிட்டு, தற்போது ஒரு லட்சம் நர்சரி செடிகள் பூங்கா முழுவதும் நடும் பணி தொடங்கியுள்ளது.

இதற்காக, செரினா, ஆக்டம்ஸ், பேசன், டேலியா மற்றும் 80 வகையான ரோஜா செடிகள், தவிர பெங்களூரிலிருந்து மலர்ச் செடிகள் கொண்டு வரப்பட்டு நடப்பட்டு வருகின்றன.

தற்போது நடப்படும் இந்தச் செடி வகைகள் பூத்துக் குலுங்குவதற்கு 3 மாதம் முதல் 4 மாதம் வரை தேவைப்படும்.

இதையடுத்து, நடைபெறவுள்ள மலர்க் கண்காட்சியில் இந்த மலர்கள் அனைத்தும் பூத்துக் குலுங்கும்.

இருப்பினும், புதிதாக நடப்பட்டுள்ள இந்தச் செடிகளும் இரவு நேரப் பனியில் கருகிவிடாமல் பாதுகாக்க, பிளாஸ்டிக் பைகள் மேற்கூரையாக அமைக்கப்பட்டுள்ளன.

ஆனால், காலையில் சூரிய வெளிச்சம் படும்படி பிளாஸ்டிக் பைகள் எடுக்கப்பட்டு விடுகின்றன. மேலும், அவ்வப்போது சொட்டு நீர் பாசனம் மூலம் தண்ணீர் ஊற்றி பராமரிக்கப்படுகின்றன.

இதற்கான ஏற்பாடுகளை, தோட்டக்கலை மேலாளர் எபன் மற்றும் அலுவலர்கள் செய்து வருகின்றனர்.

**குமரி மாவட்டத்தில் இடியுடன் பலத்த மழை**

First Published : 02 Jan 2011 01:11:49 PM IST

நாகர்கோவில், ஜன. 1: கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் இடியுடன்கூடிய பலத்த மழை பெய்தது.

தக்கலை பகுதியில் 2 மணிநேரத்துக்கும் மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது. நவம்பர் மாதத்திலும், டிசம்பர் மாத தொடக்கத்திலும் இடைவிடாது மழை கொட்டியது. டிசம்பர் 8-ம் தேதி பெய்த பலத்த மழையால் மாவட்டத்தில் உயிர்ச்சேதமும், பொருள்சேதமும் ஏற்பட்டது. பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு அணைகளில் நீர்மட்டம் உச்சத்தை எட்டியது. இதையடுத்து கடந்த 3 வாரங்களாக மாவட்டத்தில் மழை ஓய்ந்திருந்தது. இதனால் கும்பப்பூ

சாகுபடிக்காக கடந்த வாரத்தில் தண்ணீர் திறந்துவிடப்பட்டிருந்தது. இந்நிலையில், சனிக்கிழமை பிற்பகல் தொடங்கி நாகர்கோவில், தக்கலை, களியக்காவிளை, நித்திரவிளை, மார்த்தாண்டம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் மழை பெய்தது. தக்கலை, புலியூர்குறிச்சி, திருவிதாங்கோடு, அழகியமண்டபம் உள்ளிட்ட பகுதிகளில் 2 மணிநேரம் இடியுடன் பலத்த மழை கொட்டியது. இதனால் நாகர்கோவில்- திருவனந்தபுரம் தேசிய நெடுஞ்சாலையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால், இருசக்கர வாகனங்களை ஓட்டமுடியாத நிலை ஏற்பட்டது. கன்னியாகுமரி, குலசேகரம், திருவட்டார் பகுதிகளில் லேசான மழை காணப்பட்டது.

**வேளாண் அடையாள அட்டை பெற அழைப்பு**

First Published : 02 Jan 2011 09:21:08 AM IST

சங்ககிரி, ஜன. 1: சங்ககிரி பகுதி விவசாயிகளுக்கு வேளாண் அடையாள அட்டை பெற அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து வேளாண் உதவி இயக்குநர் ப.செளந்தரராஜன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

வேளாண்மைத் துறை மூலம் விவசாயிகளின் அடிப்படை விவரங்கள், வேளாண் இணைய தளத்தில் பதிவு செய்யப்பட்டு விவசாயிகளுக்கு அந்தந்த வட்டாரம் வாரியாக அடையாள எண் வழங்கும் பணி நடந்து வருகிறது.

அடையாள எண் வழங்கப்பட்ட விவசாயிகளுக்கு, தற்போது அடையாள அட்டை வழங்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இதில் விவசாயி பெயர், முகவரி, வயது, கல்வித்தகுதி, கிராமம், ஊராட்சி, வட்டம், தொலைபேசி எண், மின்அஞ்சல் முகவரி, நிலத்தின் சர்வே எண், நிலப்பரப்பு, குடும்ப அட்டை எண், கணக்கு வைத்துள்ள வங்கியின் பெயர், வங்கி கணக்கு எண் போன்ற விவரங்களுடன், பாஸ்போர்ட் அளவு போட்டோ ஒட்டப்பட்டிருக்கும்.

அரசின் மானிய உதவிகளைப் பெற இந்த அடையாள அட்டையை பயன்படுத்திக் கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

**சாத்தான்குளத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி**

First Published : 02 Jan 2011 01:11:05 PM IST

சாத்தான்குளம், ஜன.1: சாத்தான்குளம் வனச்சரக அலுவலகத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

திருச்செந்தூர் வேளாண்மை பொறியியல் துறை நீர் வள, நிலவளத் திட்டத்தின் கீழ் கருமேணி ஆறு உபவடி நில விவசாயிகளுக்கு சொட்டுநீர்ப் பாசனம் உள்ளிட்டவை குறித்த பயிற்சி முகாம் நடைபெற்றது.

முகாமுக்கு, வேளாண்மைப் பொறியியல் துறை உதவி இயக்குநர் சுந்தர் தலைமை வகித்தார். உதவி பொறியாளர் வான்மலர் தெரசா வரவேற்றார்.

கிள்ளிக்குளம் வேளாண்மை கல்லூரி ஆராய்ச்சியாளர்கள் ராஜலட்சுமி, சுதாராணி, உதவி பொறியாளர் சேர்மராஜன், உதவி பொறியாளர் மகேஷ் ஆகியோர் விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கப் பயிற்சி அளித்தனர்.

விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகளை உதவி இயக்குநர் சுந்தர் வழங்கினார். உதவி பொறியாளர்கள் கதிரேசன், இளநிலைப் பொறியாளர் லட்சுமி காந்தன், ஊராட்சித் தலைவர்கள் ராமஜெயம், அந்தோனிராஜன், முன்னாள் ஊராட்சித் தலைவர் அழகேசன், செங்குளம் விவசாய சங்கத் தலைவர் முருகேசன், வனவர் மார்க்கண்டகிருஷ்ணன், உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். இளநிலைப் பொறியாளர் மரிய பாக்கியம் நன்றி கூறினார்.

**மானிய விலையில் பம்ப்செட்**

First Published : 02 Jan 2011 10:30:30 AM IST

திருவாடானை, ஜன. 1: திருவாடானை தாலுகா, ஆர்.எஸ்.மங்கலம் பகுதி விவசாயிகளுக்கு மானிய விலையில் பம்ப்செட் வழங்கப்படுவதாக வேளாண் அதிகாரி தெரிவித்தார்.

திருவாடானை தாலுகா, ஆர்.எஸ்.மங்கலம் பகுதியில் நெல் விவசாயம் மட்டுமில்லாத பருத்தி, மிளகாய் ஆகியவையும் பயிர் செய்யப்படுகின்றன. இப்பகுதியில், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதில், ஆயில் என்ஜின் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. 5 எச்.பி. மற்றும் அதற்கு மேல் உள்ள பம்ப்செட்களுக்கு ரூ. 10 ஆயிரம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, நெல் சாகுபடி விவசாயிகள் ஆர்.எஸ். மங்கலம் வேளாண் விரிவாக்க மையத்தில் உதவி வேளாண் அலுவலர்களை அணுகி உரிய விண்ணப்பம் பெற்று, மானியத்தில் பம்ப்செட் வாங்கிப் பயனடையுமாறு வேளாண் உதவி இயக்குநர் முகம்மது அப்துல்நசீர் தெரிவித்தார்.

**பயிர்கள் சேதம்: நஷ்டஈடு கோரி ஆர்ப்பாட்டம்**

First Published : 02 Jan 2011 10:30:39 AM IST

கமுதி,ஜன. 1: தொடர் மழையால் சேதமடைந்த பயிர்களுக்கு நஷ்டஈடு வழங்கக் கோரி, கமுதியில் மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆர்ப்பாட்டம் (படம்) நடத்தினர்.

பஸ் நிலையம் அருகே நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு, தாலுகா செயலாளர் ஆர். முத்துவிஜயன் தலைமை வகித்தார். ராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் ஆர். ஞானவாசகம், மாவட்டச் செயற்குழு உறுப்பினர் ஏ. கோவிந்தசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொடர் மழையால், பயிர்கள் சேதமடைந்து லட்சக்கணக்கில் விவசாயிகள் நஷ்டமடைந்துள்ளனர்.

ஆகவே, தலா ஒரு ஏக்கருக்கு நிலக்கடலைப் பயிருக்கு ரூ. 8 ஆயிரம், பயறு வகைகள் மற்றும் நெல்லுக்கு தலா ரூ. 10 ஆயிரம், மிளகாய்ப் பயிருக்கு ரூ. 20 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தின்போது வலியுறுத்தப்பட்டன.

மேலும், மழை பாதித்த பகுதிகளில் நிவாரண உதவிகளை வழங்கவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட, தாலுகா மற்றும் கிளை நிர்வாகிகள், பெண்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**விவசாயத் தொழிலாளர்கள் சங்க ஊழியர்கள் கூட்டம்**

First Published : 02 Jan 2011 11:35:56 AM IST

கும்பகோணம், ஜன.1: கும்பகோணத்தில் அனைத்திந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தின் தஞ்சை மாவட்ட ஊழியர்கள் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

கும்பகோணம் அருகேயுள்ள சோழன் மாளிகை, பட்டீஸ்வரம், பம்பப்படையூர் ஆகிய பகுதிகளில் 25 ஆண்டுகளுக்கும் மேலாக கோயில் நிலத்தில் வசித்து வரும் 2,000-க்கும் அதிகமான ஏழைக் குடும்பங்கள் உள்பட மாவட்டம் முழுவதிலும் கோயில், மடம், அரசு புறம்போக்கு இடங்களில் வசித்து வரும் மக்களுக்கு குடிமனைப் பட்டா கோரி போராட்டங்களை நடத்த வேண்டும்.

மாவட்டம் முழுவதிலும் இடிந்து விழும் நிலையில் உள்ள தொகுப்பு வீடுகளில் வசித்து வரும் தலித் குடும்பத்தினருக்கு மாற்று இடம் வழங்குவதுடன், அவர்களுக்கான வீடுகளை அரசே தனது சொந்த செலவில் கட்டித் தர வேண்டும்.

மழைக் காலங்களில் வேலையின்றி பாதிக்கப்பட்ட விவசாயத் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், சிறு, குறு விவசாயக் குடும்பங்களுக்கு பொங்கல் பொருள்களுக்குப் பதிலாக மாதம் ரூ. 3,000, மாதம் 50 கிலோ இலவச அரிசி, 5 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்க வேண்டும்.

வேப்பத்தூர் தலித் பெண் துர்காதேவி சாவு தொடர்பாக சிபிசிஐடி விசாரணைக்கு மதுரை உயர் நீதிமன்றம் உத்தரவிட வேண்டும்.

அதிகளவில் சொத்து சேர்த்ததாக திருவலஞ்சுழி ஊராட்சித் தலைவர் மீது புகார் எழுந்துள்ளதால், மாவட்ட ஆட்சியர் நேரடியாக விசாரணை நடத்த வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்துக்கு சங்கத்தின் தஞ்சை மாவட்டத் தலைவர் டி. கன்னையன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலர் கே. மாசிலாமணி மாநாட்டு வேலை அறிக்கை வாசித்தார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலர் பாலசுந்தரம், மாநிலத் தலைவர் டி.கே.எஸ். ஜனார்த்தனன், மாநில துணைத் தலைவர்கள் இளங்கோவன், உஷா, மாநிலச் செயலர் அம்மையப்பன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாவட்டக் குழுவைச் சேர்ந்த எஸ். குருசாமி, பாரதி,

அகில இந்திய மாணவர் கழகத்தைச் சேர்ந்த கே. ரமேஷ்வர் பிரசாத், புரட்சிகர இளைஞர் கழகத்தைச் சேர்ந்த செந்தில் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**"தங்கத்துக்கு இணையாக' மஞ்சள் விலை!**

First Published : 01 Jan 2011 09:14:55 AM IST

ஈரோடு, டிச. 31: ஈரோட்டில் தங்கத்துக்கு இணையாக மஞ்சள் விலையும், ரூ. 17 ஆயிரத்தை எட்டியுள்ளது.

÷மஞ்சளுக்கு ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் வரை நிலையில்லாத விலை இருந்தது. வடமாநிலங்களில் கடும் கிராக்கி ஏற்பட்டதால், ஆன்லைன் மூலம் மஞ்சள் விற்பனை துவங்கியது. இதனால், மஞ்சள் விலை தங்கத்தை போல், தினமும் அதிகரித்து வருகிறது. இந்த வாரத்தில் குவிண்டால் விலை ரூ. 17 ஆயிரம் வரை விற்பனையானது. ÷கடந்த 21-ம் தேதி, விரலி ரூ. 16 ஆயிரத்து 349, 22-ம் தேதி ரூ. 17 ஆயிரத்து 11, 23-ம் தேதி ரூ. 17 ஆயிரத்து 89, 24-ம் தேதி ரூ. 16 ஆயிரத்து 947-க்கு விலை போனது. கடந்த 27-ம் தேதி ரூ. 17 ஆயிரத்து 99-க்கு விற்பனையானது. 28-ம் தேதி ரூ. 17 ஆயிரத்து 139-க்கு விற்பனையானது 29-ம் தேதி ரூ. 17 ஆயிரத்து 159ஆக விலை உயர்ந்தது. ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் விரலி ரூ. 16 ஆயிரத்து 880, கிழங்கு ரூ. 16 ஆயிரத்து 644-க்கு வியாழக்கிழமை விற்றது. 774 மூட்டை வந்ததில் 590 மூட்டைகள் விற்பனையாகின.

÷வெளி மார்க்கெட்டில் விரலி ரூ. 17 ஆயிரத்து 29, கிழங்கு ரூ. 15 ஆயிரத்து 861க்கு விற்றது. 1,763 மூட்டைகள் வந்ததில் 875 மூட்டை விற்றது. கோபி கூட்டுறவு சங்கத்தில் விரலி ரூ. 17 ஆயிரத்து 210, கிழங்கு ரூ. 17 ஆயிரத்து 110-க்கு விற்றது. 128 மூட்டை வந்ததில், 124 மூட்டைகள் விற்றன. ஈரோடு கூட்டுறவு சங்கத்தில் விரலி ரூ. 17ஆயிரத்து 80, கிழங்கு ரூ. 17 ஆயிரத்து 99-க்கு விற்றது. 419 மூட்டை வந்ததில், 378 மூட்டை விற்றது.

÷இதுகுறித்து வியாபாரி ஒருவர் தெரிவித்தது: வடமாநிலங்களில் மஞ்சளுக்கு அதிக தேவை ஏற்பட்டுள்ளதால், ஒரு வாரமாக மஞ்சள் விலை ரூ. 17 ஆயிரமாக உள்ளது. தற்போது பழைய மஞ்சள்தான் வருகிறது. வரத்துக் குறைவாக உள்ளதால், விலை உயர்ந்துள்ளது. ஜனவரிக்குப் பின் புது மஞ்சள் வரத்து அதிகரிக்கும். அதுவரை இதே விலை நீடிக்கும் என எதிர்பார்க்கிறோம் என்றார்.

**இலவச கால்நடை மருத்துவ முகாம்**

First Published : 31 Dec 2010 09:52:48 AM IST

உதகை, டிச. 30: நீலகிரி மாவட்ட தெற்கு வனக்கோட்டத்தின் சார்பில் மஞ்சனக்கொரை பகுதியில் இலவச கால்நடை மருத்துவ முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

÷வனப்பகுதிகளுக்கு அருகே வளர்க்கப்படும் கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்கள் வனவிலங்குகளுக்கும் தொற்றி அவை உயிரிழக்க வாய்ப்புள்ளதா என்பதைக் கண்டறிந்து அதைத் தடுக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

÷நீலகிரி மாவட்டத்திலுள்ள வனப்பகுதிகளையொட்டியுள்ள பகுதிகளில் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கு தொற்று நோய்கள் ஏதும் ஏற்படாமல் தடுக்க அவற்றிற்கு தடுப்பூசி போடுவதற்காக நிதி ஒதுக்கப்பட்டு தற்போது தடுப்பூசி போடும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

÷இதன் ஒரு பகுதியாக நீலகிரி தெற்கு வனக்கோட்டத்திற்கு உள்பட்ட அவலாஞ்சி பகுதியில் கடந்த வாரத்தில் தடுப்பூசி போடும் பணிகள் நடைபெற்றன. இதைத் தொடர்ந்து உதகை அருகேயுள்ள மஞ்சனக்கொரை பகுதியில் வளர்ப்பு கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது. முகாமில் உதகை அரசு கால்நடைத்துறை மருத்துவர் சுகன்யா பங்கேற்று அப்பகுதியிலுள்ள கால்நடைகளுக்கு இலவச தடுப்பூசிகளைப் போட்டார்.

**ஆங்கிலப் புத்தாண்டு அதிசயம் நிகழ்த்தட்டும்!**

First Published : 31 Dec 2010 10:08:01 PM IST

Last Updated : 31 Dec 2010 10:17:27 PM IST



2010ல் வெங்காயமும் தக்காளியும் உருளைக் கிழங்கோடு இணைபிரியாமல் இருந்து உச்ச விலை தொட்டிருக்கிறது.
2011ல் அமைதியும் ஆனந்தமும் நம்மோடு இணைபிரியாமல் இருந்து உயர்வு நிலை அடையட்டும்!

**கோழிக்கறி, மீன் விலை சர்...! காய்கறி விலையோ விர்...!**

பதிவு செய்த நாள் : ஜனவரி 03,2011,00:39 IST

பேரம்பாக்கம் : பச்சை காய்கறி வகைகளான கத்தரி, வெண்டை, கேரட், பீன்ஸ், அவரைக்காய் போன்ற பொருள்கள், கடந்த 3 மாதங்களாக கிலோ 30 முதல் 50 ரூபாய் வரை விற்கப்படுகிறது.காய்கறிகளின் விலை கூடியதால், கிராமப்புறங்களில் சைவ உணவு வகைகளை பயன்படுத்தும் சராசரி மற்றும் நடுத்தர குடும்பத்தினர் மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளனர். காய்கறிகளின் விலை எட்டாக் கனியாகி விட்டதால், சைவ உணவுப் பிரியர்கள் தர்ம சங்கடமான நிலையில் நல்ல உணவை தேர்ந்தெடுக்க முடியாமல் உள்ளனர்.கிராமங்களில் உள்ள மார்க்கெட்டில் வெங்காயம், தக்காளி ஆகியவற்றின் விலை குறையாமல், சமச்சீராக விற்கப்பட்டு வருகிறது. ஒரு கட்டு கீரை 10 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.இந்நிலையில், இருமாதங்களுக்கு முன் வரை கிலோ 120 ரூபாய்க்கு விற்கப்பட்டு வந்த கறிக்கோழியின் விலை, தற்போது 80 முதல் 90 ரூபாய் வரை விற்கப்படுகிறது. கிராமப்பகுதிகளில் சைக்கிளில் கூவி கூவி, மீன் கிலோ 50 ரூபாய்க்கு விற்கப்பட்டு வருகிறது.முன்பெல்லாம் வாரத்தில் ஒரு நாள் அசைவம் சாப்பிட்ட கிராம மக்கள், தற்போது வாரத்துக்கு ஒரு நாள் சைவ உணவை சாப்பிடும் நிலை ஏற்பட்டுள்ளது.

**மீன் பதப்படுத்தும் நிலையம் அமைக்காததால் மீனவர்கள் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 03,2011,00:47 IST

செய்யூர் : கடப்பாக்கம் பகுதியில் மீன்களை பாதுகாத்து விற்பனை செய்ய மீன் பதப்படுத்தும் நிலையம் இல்லாததால், மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சிரமப்பட்டு பிடித்து வரும் மீன்களை, வியாபாரிகள் கேட்கும் குறைந்த விலைக்கே விற்க வேண்டிய கட்டாயம்

ஏற்பட்டுள்ளது.காஞ்சிபுரம் மாவட்டம் இடைக்கழிநாடு பேரூராட்சியில், கடப்பாக்கம் குப்பம், ஊத்துக்காட்டம்மன் குப்பம், தண்டுமாரியம்மன் குப்பம் என, மூன்று மீனவ குப்பங்கள் உள்ளன. இங்கு மூன்றாயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் வசிக்கின்றனர். இவர்களிடம் 15 விசைப் படகுகள், 170 பைபர் படகுகள் உள்ளன.வாளை, வஞ்சிரம், ஷீலா, கார்வா, கொடுவா, பாறை போன்ற மீன் வகைளையும், பொடி இறால், வெள்ளை இறால், கருப்பு இறால், நண்டு போன்றவற்றையும் மீனவர்கள் பிடித்து வருகின்றனர். செஞ்சி, புதுச்சேரி, செங்கல்பட்டு, மதுராந்தகம் உட்பட பல்வேறு ஊர்களிலிருந்து மீன் வியாபாரிகள் இங்கு வந்து மீன்களை வாங்கிச் செல்கின்றனர்.அதிகமான மீன்கள் பிடிபடும் காலங்களில், மீன்கள் அனைத்தையும் விற்க முடியாத நிலை ஏற்படுகிறது. மீதமாகும் மீன்களை பாதுகாப்பாக வைத்து, மறுநாள் விற்பனை செய்ய போதிய வசதியில்லை. இதனால், மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.இதுகுறித்து தண்டுமாரியம்மன் குப்பத்தைச் சேர்ந்த மீனவர் ஏழுமலை கூறியதாவது:பிடிபடும் மீன்களை பதப்படுத்தி, விற்பனை செய்ய போதிய வசதியில்லை. எனவே, வியாபாரிகள் கேட்கும் விலைக்கே மீன்களை விற்க வேண்டியுள்ளது. காய்கறிகள் கெடாமல் பாதுகாக்க பதப்படுத்தும் நிலையம் உள்ளது போல், மீன்களை பாதுகாக்க இப்பகுதியில் மீன்களை பதப்படுத்தும் நிலையம் அமைத்து தர வேண்டும்.இப்பகுதியில் இறால் அதிகம் கிடைக்கிறது. அவற்றை பிடித்த மூன்று மணி நேரத்திற்குள் விற்று விட வேண்டும்; இல்லையெனில் கெட்டுவிடும். இவற்றை பாதுகாக்க முடியாததால், கிலோ 50 ரூபாய் என விற்கிறோம். மீன் மற்றும் இறால்களை ஐஸ் பெட்டியில் வைக்க, 25 ஆண்டுகளுக்கு முன் மீன் வளத்துறை சார்பில் இங்கு ஐஸ் உற்பத்தி தொழிற்சாலை துவக்கப்பட்டது. ஐஸ் உற்பத்தி செய்து குறைந்த விலைக்கு தந்தனர்; மீனவர்கள் பயன் பெற்றனர்.நாளடைவில் ஐஸ் உற்பத்தி தொழிற்சாலை, சரியாக பராமரிக்காமல் மூடப்பட்டது. ஐஸ் தொழிற்சாலை கட்டடம் பராமரிப்பின்றி பழுதடைந்துள்ளது. தற்போது வெளியூரிலிருந்து ஐஸ் வாங்கி வந்து மீன்களை பாதுகாக்கிறோம்.மீன்வளத் துறைக்கு சொந்தமாக ஒரு ஏக்கருக்கும் மேல் சொந்த இடம் உள்ளது. இங்கு மீன் பதப்படுத்தும் நிலையம் அமைக்க, மீன்வளத் துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு ஏழுமலை தெரிவித்தார்.

**ஈரோடு சந்தையில் மாடுகள் விற்பனை அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 03,2011,01:32 IST

ஈரோடு: ஈரோடு சந்தையில் 90 சதவீதம் மாடுகள் விற்பனையாகின. ஈரோடு கருங்கல்பாளையம் மாட்டு சந்தைக்கு ஈரோடு மற்றும் சிவகிரி,மொடக்குறிச்சி, பொள்ளாச்சி, திருப்பூர், கோவை, பவானி, அந்தியூர், அம்மாபேட்டை, ஜம்பை ஆகிய பகுதிகளில் இருந்து கறவை மற்றும் எருமை மாடுகள் விற்பனைக்காக விவசாயிகளும், வியாபாரிகளும் கொண்டு வருகின்றனர். சிந்துரக

மாடுகளில் பலதரப்பட்ட மாடுகளை விற்பனைக்காக வியாபாரிகள் ஈரோட்டுக்கு கொண்டு வருவது வழக்கம். கன்று ஈன்றக் கூடிய பீர்டு மாடுகள், பில்லா மாடுகள், செவல மாடுகள், கறுப்பு மாடுகள், வெள்ளை மாடுகளும் வருகின்றன. இவற்றை வாங்கிச் செல்ல கேரளா, கர்நாடகா, ஆந்திரா, புதுச்சேரி மாநிலங்களை சேர்ந்த வியாபாரிகள் ஆர்வம் காட்டுகின்றனர். ஈரோடு மாட்டு சந்தை மேலாளர் முருகன் கூறுகையில்,""கேரளா, ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலத்தை சேர்ந்த 90 சதவீதம் வியாபாரிகள் மாடுகள் வாங்கிச் சென்றனர். 400 சிந்து மாடுகளும், 300 எருமை மாடுகள் மட்டுமே விற்பனைக்காக வந்திருந்தன. சிந்து இன மாடுகள் 16 ஆயிரம் முதல் 30 ஆயிரம் ரூபாய் வரையிலும், எருமை மாடுகள் 12 ஆயிரம் முதல் 27 ஆயிரம் ரூபாய் வரையிலும் விலைபோனது," என்றார். இவ்வாறு அவர் கூறினார்.

**கரும்பு வெட்டும் தொழிலாளர் சங்கக் கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 02,2011,22:41 IST

விருத்தாசலம் : விருத்தாசலம் அடுத்த முருகன்குடியில் கரும்பு வெட்டும் தொழிலாளர் சங்க வட்டக்குழுக் கூட்டம் நடந்தது. தலைவர் பரமசிவம் தலைமை தாங்கினார். செயலர் அழகப்பன் முன்னிலை வகித்தார். மாவட்ட தலைவர் மோகன்ராஜ், செயலர் மதியழகன் கூட்டம் குறித்து பேசினர். கூட்டத்தில் 55 வயதைக் கடந்த தொழிலாளர்களுக்கு எந்த நிபந்தனையும் இன்றி மாதம் ஒன்றுக்கு 1,000 ரூபா# ஓய்வூதியமாக மாநில அரசு வழங்க வேண்டும். தமிழர் திருநாளையொட்டி தொழிலாளர்களுக்கு ஆலை நிர்வாகம் போனஸ் வழங்க வேண்டும். தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை, வெட்டும் கத்தி, வெட்டு கூலி போன்றவற்றை ஆலை நிர்வாகம் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாவட்ட குழு உறுப்பினர் இளங்கோவன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வேர்க்கடலை விதை நேர்த்தி செய்த விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 02,2011,01:10 IST

கிள்ளை:கிள்ளை சுற்றுப் பகுதியில் கடந்த இரு தினங்கள் பெய்த மழையால் வேர்க்கடலை விதை நேர்த்தி செய்த விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். கிள்ளை, பொன்னந்திட்டு, ஆசாரவெளி, மானம்பாடி, சிங்காரக்குப்பம், முழுக்குத்துறை, குச்சிப்பாளையம், வடக்குப்பிச்சாவரம், தெற்கு பிச்சாவரம் மற்றும் டி.எஸ். பேட்டை உள்ளிட்ட சுற்றுப் பகுதியில் ஆண்டு தோறும் மானவாரி சாகுபடியாக வேர்க்கடலை பயிர் செய்யப்படுகிறது.இதற்காக கார்த்திகை தீபம் முடிந்ததும் விதை

நேர்த்தி செய்யப்படும். தற்போது பருவம் கடந்து மழை பெய்ததால் சுற்றுப்பகுதி விவசாயிகள் ஈரப்பதம் உலர காத்திருந்தனர்.

சமீபத்தில் பெய்த மழையால் மானம்பாடி, ஆசாரவெளி மற்றும் பொன்னந்திட்டு பகுதியில் விதை நேர்த்தி செய்த விவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.மழை விட்டு வயலில் ஈரப்பதம் காய்ந்ததைத் தொடர்ந்து கடந்த 26, 27 மற்றும் 28 தேதிகளில் விதை நேர்த்தி செய்த விவசாயிகள் கடந்த இருதினங்களாக பெய்த திடீர் மழையால் தண்ணீர் தேங்கி பாதிக்கப் பட்டுள்ளனர்.விவசாயிகள் நஷ்ட ஈடு குறித்து வேளாண் அதிகாரிகளிடம் கேட்டதற்கு, "டிசம்பர் 6ம் தேதி வரை மானாவாரி குறித்து சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அதிகாரிகள் மூலம் கணக்கெடுப்பு செய்து அரசுக்கு அறிக்கை சமர்பிக்கப்பட்டதால் மானவாரி குறித்து நஷ்ட ஈடு வழங்க முடியாது' என தெரிவித்தனர். இதனால் 3,000 ஏக்கர் விதை நேர்த்தி செய்த விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

**கறிக்கோழி வளர்க்கும் விவசாயிகளுக்கு அரசு நலவாரியம் அமைத்திட கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 02,2011,22:31 IST

செஞ்சி : தமிழ்நாடு கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகளுக்கு நல வாரியம் அமைக்க கோரிக்கை விடுத்துள்ளனர். செஞ்சியில் தமிழ்நாடு கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் சங்கத்தின் தாலுகா நிர்வாகிகள் அறிமுகம் மற்றும் ஆலோசனை கூட்டம் நடந்தது. ஒன்றிய தலைவர் சங்கர் தலைமை தாங்கினார். செயலாளர் வெங்கடேஷ் முன்னிலை வகித்தார். மாநில செயலாளர் கார்த்திக், இளவரசன், கருணாகரன் சிறப்புரை நிகழ்த்தினர். நிர்வாகிகள் பூபாலன், அன்பழகன், அய்யனார், பிரபு, செல்வராஜ், நாராயணன், தேவராஜ், காசிநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஒன்றிய துணை தலைவர் சின்னதுரை நன்றி கூறினார். இதில் கோழிப்பண்ணை களுக்கு வழங்கப்படும் மின்சாரத்தை சிறுதொழிலுக்கான அட்டவணையில் வழங்க வேண்டும். நலவாரியம் அமைக்க வலியுறுத்தி கலெக்டர் அலுவலகம் முன்பு கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்துவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**நெற் பயிரில் நோய் தாக்குதலை கட்டுப்படுத்திட வழிமுறை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 02,2011,22:06 IST

திண்டிவனம் : நெற் பயிரில் லட்சுமி நோயை கட்டுப்படுத்த கையாள வேண்டிய வழிமுறைகளை வேளாண் அறிவியல் நிலையம் அறிவித்துள்ளது. திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலைய தலைவர் டாக்டர் சாத்தையா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: விழுப்புரம் மாவட்டத்தில்

நெற்பயிரில் லட்சுமி நோய் தாக்குதல் காணப்படுகிறது. இதன் அறிகுறிகள் நெற் கதிரில்தான் புலப்படக்கூடியவை. இந்நோய்க்கு நெல்புழுநோய் என்ற மற்றொரு பெயரும் உண்டு. நோயுற்ற நெல்மணிகள் உருவில் பெரிதாக இருக்கும். கதிரில் உள்ள நெல்மணிகள் ஆரஞ்சு அல்லது மஞ்சள் நிறத்தில் பழுத்து துகள்களாக மாறிவிடும். பாதிக்கப்பட்ட நெல்மணிகளை கையால் தொடும்போது மாவுபோல் பூசணத்தின் வித்துக்கள் காணப்படும். இந்நோய் கதிரை தாக்கி அதிக மகசூல் இழப்பை ஏற்படுத்தும். சாதாரண நிலையில் இருந்த இந்நோய் தற்போது ஆங்காங்கே காணப்படுகிறது. காற்றில் அதிக ஈரப்பதம் 90 முதல் 95 சதம் இருக்கும்போதும் குறைந்த வெப்பநிலை மற்றும் தொடர் மழையால் இதன் நோய்க்காரணி அதிகமாவதற்கும், பரவுவதற்கும் உகந்ததாகும். இந்நோய்க்கு காரணமாக அமைந்திருப்பது ஒரு வகைப் பூசணமாகும். தடுக்கும் முறைகள்: நோயற்ற விதைகளை பயன் படுத்த வேண்டும். நோயற்ற வயலில் உள்ள அறுவடை, கழிவுகளை அகற்றிவிட வேண்டும். குத்துக்கட்டும் பருவம் அல்லது பூக்கும் பருவத்திற்கு முன் ஹெக்சகோனசல் லிட்டருக்கு 1 மி.லி., குளோரோதலான் மருந்துடன் லிட்டருக்கு 2 கிராம், காப்பர் ஹைட்ராக்சைடு லிட்டருக்கு 2.5 கிராம் ஆகிய பூசணக் கொல்லி மருந்துகளில் ஏதேனும் ஒன்றை தெளிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட நெற்கதிர்களை தனியாக அறுவடை செய்து எரித்துவிட வேண்டும். பாதிக்கப்பட்ட வயலில் இருந்து அறுவடை செய்யும் நெல்மணிகளை விதைக்கு பயன்படுத்தும்போது கேப்டான் அல்லது கார்பன்டாக்சிம் என்ற பூசனக்கொல்லி மருந்தை ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் என்ற விகிதத்தில் விதை நேர்த்தி செய்ய வேண்டும். இதனைச் செய்ய மறந்தால் அடுத்த பருவத்தில் நோய் தொற்றுவதற்கு உகந்த காரணிகள் இருக்கும் பட்சத்தில் லட்சுமி நோய் மீண்டும் மீண்டும் தாக்கும் வாய்ப்பு உள்ளது. இந்நோய்தாக்குதலை தடுக்க விவசாயிகள் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு பயன்பெற கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**வேளாண் அறிவியல் நிலையத்தில்சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 02,2011,02:42 IST

திண்டிவனம்:திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலையத்தில் நிலக்கடலை சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி முகாம் நடந்தது.நல்லாவூர் உபவடிப்பாசனப் பகுதியில் செயல்படுத்தப்படும் நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் நிலக்கடலை சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி முகாம் நடந்தது. வேளாண் அறிவியல் நிலையத்தின் உதவி பேராசிரியர் முனைவர் பிரபு வரவேற்றார். உதவி பேராசிரியர் முனைவர் ரேணுகா துவக்கவுரை நிகழ்த்தினார்.

பயிற்சி முகாமில் திண்டிவனம் எண்ணெய்வித்துக்கள் ஆராய்ச்சி நிலைய நுண்ணுயிரியில் துறை உதவிப் பேராசிரியர் ராமலிங்கம் நிலக்கடலை சாகுபடி தொழில் நுட்பங்களை விவசாயிகளிடம் எடுத்துரைத்தார். உதவிப்பேராசிரியர் வைத்தியலிங்கம் நிலக்கடலை சாகுபடி குறிப்புகள்

குறித்தும், வேளாண் அறிவியல் நிலைய விதை நுட்பவியல் வல்லுனர் நடராஜன் விதை உற்பத்தி மற்றும் விதை நேர்த்தி குறித்தும் விளக்கினர்.நல்லாவூர் உபவடிநீர் பாசன பகுதியை சேர்ந்த மாரிமங்கலம், தைலாபுரம், குருவம்மாபேட்டை, நல்லாவூர், ஆலங்குப்பம், புதூர், ஒழிந்தியாப்பட்டு, கட்டளை மற்றும் ஓமிப்பேர் கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் கலந்துக் கொண்டனர்.

**சொட்டுநீர் பாசன முறை பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 02,2011,03:57 IST

நாமக்கல்: "நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 4ம் தேதி சொட்டு நீர் பாசன முறை பயிற்சி நடக்க உள்ளது' என, திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 4ம் தேதி சொட்டு நீர் பாசனத்தில் மக்காச்சோளம், நிலக்கடலை மற்றும் எள் சாகுபடி முறைகள் என்ற தலைப்பில் ஒரு நாள் பயிற்சி முகாம் நடக்கிறது.

அந்த பயிற்சியில் சொட்டுநீர் பாசனத்தின் முக்கியத்துவம், பாசனத்திற்கான உபகரணங்கள் பராமரித்தல், மக்காச்சோளம், நிலக்கடலை மற்றும் எள் பயிர்களுக்கு சொட்டுநீர் அமைக்கும் முறை, உயர் விளைச்சல் ரகம் பற்றி பயிற்சி அளிக்கப்படும்.மேலும், சொட்டுநீர் பாசனம் அமைக்க பல்வேறு துறைகள் மூலம் வழங்கப்படும் கடனுதவி திட்டம் குறித்த விளக்கமும் அளிக்கப்படும். விவசாயிகள், பண்ணையாளர், ஊரக மகளிர், இளைஞர்கள் என ஆர்வமுள்ள அனைவரும் இதில் பங்கேற்கலாம். பயிற்சியில் பங்கேற்க விருப்பமுள்ளோர் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 3ம் தேதிக்குள் நேரிலோ அல்லது 04286-266345, 266244 ஆகிய ஃபோன் எண்களிலோ தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளலாம், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நெல்லில் புகையான் பூச்சி தாக்குதல்கட்டுப்படுத்தும் முறை அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 02,2011,03:52 IST

பள்ளிபாளையம்: "பள்ளிபாளையம் வட்டாரத்தில் பயிரிடப்பட்டுள்ள நெல் பயிரில் புகையான் பூச்சி தாக்குதல் அதிகம் உள்ளது. அதை ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையில் கட்டுப்படுத்தலாம்' என, வேளாண் உதவி இயக்குனர் முரளிதரன் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:பள்ள்ளிபாளையம் வட்டாரத்தில் நெல் பயிர் தற்போது பூக்கும் நிலை முதல் பால் பிடிப்பு நிலை வரை உள்ளது. தற்போது நீர் தேங்கியுள்ள வடிகால் வசதி குறைவான வயல்களில் புகையான் பூச்சியின் தாக்குதல் தென்படுகிறது. இப்பூச்சிகள் சாம்பல் நிறமாக தத்துப் பூச்சிகளாக இருக்கும். இவை நெல் பயிரிடுடன் தூர் பகுதிகளில் கூட்டம் கூட்டமாக இருந்து சாற்றினை உறிஞ்சி சேதம் விளைவிக்கும்.

சத்து பயிரின் மேலே போகாததால் பயிர் மஞ்சளாக மாறி திட்டு திட்டாக கருகி நெருப்பு வைத்தது போன்றும், உச்சகட்ட சேதம் வட்டமாக தெரியும். பொதுவாக நெருக்கமாக நடவு செய்து, சூரிய வெளிச்சம் தூரில் படாது, காற்றோட்டம் இல்லாத சூழ்நிலையில் தூர்களில் இப்பூச்சி தாக்கும். தழைச்சத்து உரங்கள் யூரியா போன்றவை அதிகமாக இட்ட வயல்களை புகையான் பூச்சிகள் அதிகம் தாக்குகின்றன.காற்றின் ஈரப்பதம் அதிகம் இருந்தாலும் புகையான் தாக்குதல் அதிகரிக்கும். ராஜராஜன் 1000 நெல் சாகுபடி வயல்களில் புகையான் தாக்குதல் இருக்காது. புகையான் பூச்சிகள் இருப்பதை தூர்களின் அடியில் கண்காணித்து அழிக்க வேண்டும். புகையான் பூச்சியைப் பார்த்தவுடன் வயலில் தண்ணீரை உடனே வடித்து விடவேண்டும். ஆறு அடிக்கு ஒரு பட்டம் விட்டு வயலில் பயிரைப் பிரித்து வைக்க வேண்டும்.தழைச்சத்து உரங்களை தவிர்க்க வேண்டும். தூர்களின் அடிப்பகுதியில் படும்படி மருந்து தெளிக்க வேண்டும். புகையானின் மறு உற்பத்தியை உண்டாக்கும் குயின்பாஸ், செயற்கை பைரித்ராய்டு ஆகிய மருந்துகளை தெளிக்கக் கூடாது. ஒரு ஏக்கருக்கு அசிபேட் 75 எஸ்.பி., என்ற மருந்தை 250 கிராம் என்ற அளவில் தெளித்து பூச்சியை கட்டுப்படுத்தலாம்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தோட்டக்கலை பயிர்களுக்கு 75 சதவீத மானியம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 02,2011,20:52 IST

கொட்டாம்பட்டி:கொட்டாம்பட்டி ஒன்றியத்தில் தோட்டக்கலைப் பயிர்களுக்கு 50 முதல் 75 சதவீதம் வரை மானியம் வழங்கப்படும் என, தோட்டக்கலைத் துறை உதவி இயக்குனர் வெங்கடேஸ்வரி தெரிவித்துள்ளார்.
இதுபற்றி அவர் கூறியதாவது,""தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம், தேசிய தோட்டக் கலை இயக்கம், துல்லிய பண்ணையத் திட்டம், சொட்டுநீர் பாசனத்திட்டம் ஆகிய திட்டங்கள் இப்பகுதியில் செயல்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், காய்கறி விதைகள், மா, நெல்லி, கோகோ கன்றுகள், உரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் 50 முதல் 75 சதவீத மானியத்தில் வழங்கப்படுகின்றன.
கொட்டாம்பட்டி ஒன்றியத்தில் 27 ஊராட்சிகளிலும் பயன்பெற நினைக்கும் விவசாயிகள் தங்கள் நிலத்தின் சிட்டா அடங்கல், குடும்ப அட்டை நகல், பாஸ்போர்ட் சைஸ் போட்டோ, சொட்டு நீர்ப் பாசனம் அமைக்கவேண்டுமெனில் நிலத்திற்கான வரைபடம் ஆகியவற்றுடன் தங்கள் பகுதி உதவி தோட்டக்கலை அலுவலர்களையோ, தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தையோ அணுகி பயன்பெறலாம்," என்றார்.

**பெல்லாரி விலை குறைவால்கூட்டுறவு விற்பனையில் சரிவு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 02,2011,23:46 IST

தேனி:வெளிமார்க்கெட்டில் பெல்லாரி வெங்காயத்தின் விலை குறைந்துள்ளதால் தேனி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் பெல்லாரி விற்பனை குறைந்துள்ளது. தேனியில் உழவர்சந்தையிலேயே பெல்லாரி வெங்காயத்தின் விலை கிலோ 50 ரூபாயினை கடந்தது. சில்லரை மார்க்கெட்டில் 70 ரூபாயாக இருந்தது. இதனால் பொதுமக்கள் கடும் அதிருப்தி அடைந்தனர்.இதனை தொடர்ந்து தேனி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கிலோ 40 ரூபாய்க்கு பெல்லாரி வெங்காயம் விற்பனை தொடங்கியது. கடந்த வாரம் வெள்ளிக்கிழமை விற்பனை தொடங்கியது. சனி, ஞாயிறு விடுமுறையாகி விட்டது.இந்த இடைவெளியில் வெளிமார்க்கெட்டில் விலை கிலோ 50 ரூபாயாகவும், உழவர்சந்தையில் விலை 40 ரூபாயாகவும் குறைந்தது. எனவே கூட்டுறவு விற்பனை மையத்தில் வெங்காயம் விற்பனை குறைய தொடங்கி உள்ளது.

**தென்னை விவசாயிகள்கவனத்திற்கு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 02,2011,22:58 IST

சிங்கம்புணரி: சிங்கம்புணரி, எஸ்.புதூர் பகுதி தென்னை விவசாயிகள், நலவாரிய உறுப்பினராக பதிவு செய்யலாம். தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகங்களில் விண்ணப்பம் பெறலாம். பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன் நான்கு போட்டோ, ரேஷன் கார்டு நகல், சமீபத்திய சிட்டா, அடங்கல், வி.ஏ.ஓ., அளித்த நில உரிமைச்சான்று இணைக்க வேண்டும். இத்தகவலை தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜமூர்த்தி தெரிவித்தார்.

**பனி, தொடர் மழையால் பூக்கள்வரத்து குறைவு; விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 02,2011,23:01 IST

மானாமதுரை:தொடர் மழை,பனிப்பொழிவு காரணமாக பூக்கள் வரத்து குறைந்துள்ளதால், விலை ராக்கெட் வேகத்தில் உயர்ந்து விட்டது.மதுரை அருகே வாடிப்பட்டி, சோழவந்தான், திண்டுக்கல், வத்தலகுண்டு, பழனியில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் ரோஜா,செவ்வந்தி,கேந்தி, மரிக்கொழுந்து,சேவல்கொண்டை உட்பட 12 வகையான பூக்களை சாகுபடி செய்துள்ளனர்.ஆண்டு தோறும் பருவ மழைக்கு பின் நடவு செய்து, நல்ல விளைச்சலை பெறுவர். பருவம் தவறி பெய்த மழை, கடும் பனிப்பொழிவால், இந்த ஆண்டு பூக்கள் விளைச்சல் குறைந்து

விட்டது. பழனி, சபரிமலைக்கு ஏராளமான பக்தர்கள் செல்வதால் பூக்கள் தேவையும் அதிகரித்துள்ளன.

கடந்த ஒரு வாரமாக ஐயப்பன் மண்டல பூஜை, மார்கழி மாத பூஜைக்கு கோயில்களில் இதன் தேவை அதிகரிக்கும்.வரத்து குறைவால், பூ மார்க்கெட்களில் விலை விர்... விர்... என உயர்ந்துவிட்டது. மார்க்கெட்டில் விலை உயர்வால், பூ வியாபாரிகள் கூடுதல் விலைக்கு மாலை, பூக்களை விற்கின்றனர்.இது குறித்து, பூ கடைக்காரர் ஒருவர் கூறுகையில், கார்த்திகை, மார்கழியில் சீசன் காலம். ஒரு வாரமாக கிலோ மல்லிகை - 900 ; முல்லை-750; பிச்சி - 750; அரளி - 250; ரோஜா -150; செவ்வந்தி-160; கேந்தி- 80 ரூபாய்க்கு விற்கிறது. இது தவிர போக்குவரத்து செலவு, பூகட்டு கூலியால் பூக்களின் விலையை உயர்த்துகிறோம். இதனால், 20க்கு விற்ற செவ்வந்தி மாலை 35 ; 50க்கு விற்ற ரோஜா மாலை 80 ரூபாய்க்கும் விற்கிறோம்," என்றார்.

**பயிர்களில் நோயை கட்டுபடுத்தபூச்சி மருந்துடன் பிராந்தி கலப்பு விவசாயிகளின் வினோதம்**
பதிவு செய்த நாள் : ஜனவரி 01,2011,23:02 IST

திருவாடானை:ராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை பகுதியில், பயிர்களில் நோய்தாக்குதலை கட்டுபடுத்த, பூச்சி மருந்துடன் பிராந்தியை பயன்படுத்துவதால், டாஸ்மாக் கடைகளில் பிராந்தி விற்பனை அதிகரித்துள்ளது. "பிராந்தியால் பூச்சியை கட்டுபடுத்த முடிகிறது,' என, விவசாயிகளும், முடியாது,' என, விவசாய அலுவலர்களும் கூறுகின்றனர்.
மாவட்டத்தின் நெற்களஞ்சியமாக திகழும் திருவாடானை பகுதியில் எந்த ஆண்டும் இல்லாத வகையில், இந்த ஆண்டு நோய் தாக்குதலால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அதிக மகசூல் மற்றும் அதிக விலை என்பதால், 75 சதவீத விவசாயிகள் "டீலக்ஸ் பொன்னி' நெல் ரகத்தை பயிரிட்டுள்ளனர்.

இதில் நெற்பழம், இலைசுருட்டு புழு, செந்தாழை போன்ற பல வகை நோய் தாக்குதலால் பயிர்கள் பாதிக்கபட்டுள்ளன. நோயை கட்டுபடுத்த பல்வேறு பூச்சி மருந்தை பயிர்களில் தெளித்தும் பயனில்லை. தற்போது விவசாயிகள் புது முயற்சியாக பூச்சி மருந்துடன் பிராந்தியை கலந்து தெளித்து வருகின்றனர். தொண்டி அருகே முகிழ்த்தகம், சம்பை, நம்புதாளை போன்ற கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் இதில் ஈடுபட்டுள்ளனர். விவசாயிகள் கூறுகையில், "பலவிதமான பூச்சி கொல்லி மருந்தை அடித்தும், பூச்சியை கட்டுபடுத்த முடியவில்லை. சிலர் கூறிய ஆலோசனைபடி பூச்சிமருந்துடன் பிராந்தியை கலந்து அடித்தோம். இதன் மூலம் பூச்சி கட்டுபடுத்தபடுகிறது,' என்றனர். திருவாடானை விவசாய உதவி இயக்குனர் கருப்பையா கூறியதாவது: பிராந்தியால் பூச்சியை கட்டுபடுத்த முடியாது. சில விவசாயிகள் மண்ணெண்ணை

மற்றும் டீசலை கலந்து தெளிக்கின்றனர். அறியாமையால் இச்செயலில் ஈடுபடுகின்றனர். விவசாயிகளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக, கிராமங்களில் முகாம் நடத்த உள்ளோம், என்றார். இதனிடையே விவசாயிகளின் இந்த முடிவால் டாஸ்மாக் கடைகளில் பிராந்தி விற்பனை களை கட்ட துவங்கி உள்ளது .

**வேளாண் நிலையத்தில் அசோலோ விற்பனை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 01,2011,02:55 IST

நாமக்கல்: "நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் அசோலோ விற்பனை செய்யப்படுகிறது' என, திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: மண்ணுக்கு அசோலோ இடுவதன் மூலம் மண்ணின் அங்ககச் சத்து அதிகரிக்கிறது. அதில் 0.43 சதவீதம் பாஸ்பரஸ் சத்தும், 2.5 சதவீதம் பொட்டாஷ் சத்தும் உள்ளது. அசோலோ நீரின் மேற்பரப்பு முழுவதும் பரவி வளர்ச்சியடைவதால் நீர் ஆவியாதல் 11 சதவீதம் தடுக்கப்படுகிறது. மண்ணில் உள்ள துளைகளின் எண்ணிக்கை அதிகரிக்கிறது.

உவர் தன்மை 0.014 சதவீதம் முதல் 0.048 சதவீதம் வரை குறைகிறது. அசோலோவில் 26 முதல் 30 சதவீதம் புரதமும், 13 சதவீதம் நார்சத்தும், 45 சதவீதம் மாவுச்சத்தும் உள்ளது. தாது உப்புகளான சுண்ணாம்பு சத்து 1.2 சதவீதமும், பாஸ்பரஸ் 0.72 சதவீதமும் உள்ளது. அதனால் கோழிகளின் உடல் மற்றும் எலும்பு வளர்ச்சிக்கு உகந்த தீவன பொருளாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், கால்நடைக்கு தேவையான அமினோ அமில விட்டமீன்கள், பீட்டா கரோட்டீன்கள் ஆகிய சத்துக்கள் இதில் உள்ளது. ஒரு கிலோ அசோலோ 50 ரூபாய் விலையில் வேளாண் அறிவியல் நிலையத்தில் விற்பனை செய்யப்படுகிறது. விருப்பமுள்ள விவசாயிகள் நாமக்கல் மோகனூர் சாலையில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்துக்கு சென்று அசோலோவை பெற்றுச் செல்லலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வெற்றிலையில் நோய் தாக்குதல் நஷ்ட ஈடு வழங்க கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 01,2011,02:52 IST

ப.வேலூர்: தொடர்மழை காரணமாக, வெற்றிலை கொடிக்கால் பயிரில் நோய் தாக்கி விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைந்துள்ளனர். மற்ற பயிர்களுக்கு வழங்குவதுபோல் வெற்றிலை விவசாயிகளுக்கும் நஷ்டஈடு வழங்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

காவிரிக்கரையோர பகுதிகளான பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், குப்புச்சிபாளையம், நன்செய் இடையாறு, பாலப்பட்டி, மோகனூர் உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பில் வெற்றிலை கொடிக்கால் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஒரு ஏக்கரில் வெற்றிலை பயிர் சாகுபடி செய்வதற்கு விவசாயிகளுக்கு 10 லட்சம் ரூபாய் செலவாகிறது. அதில் முதல் ஆண்டில் கிடங்கு வெட்டுதல், விதை மற்றும் வெற்றிலை கொடி நடுதல், விட்டம் கட்டுதல், குத்தகை மற்றும் பராமரிப்பு ஆகியவைக்காக செலவு செய்யப்படுகிறது.

இரண்டாம் ஆண்டில் இருந்துதான் விவசாயிகளுக்கு வெற்றிலை மூலம் வருவாய் கிடைக்கும். கடந்த சில வாரங்களுக்கு முன் பெய்த தொடர் மழை காரணமாக, வெற்றிலையில் வேர் அழுகல், வாடல் மற்றும் செம்பட்டை நோய்கள் தாக்கி உள்ளது. அதனால், வெற்றிலை கொடிக்கால் வெகுவாக வாடத்துவங்கி உள்ளன. அதகமான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். மற்ற விவசாயிகளுக்கு மழை காலங்களில் ஏற்படும் சேதத்தை கருத்தில் கொண்டு நஷ்டஈடு வழங்குவதுபோல், தொடர்மழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள வெற்றிலை விவசாயிகளுக்கும் நஷ்ட ஈடு மற்றும் மானியம் வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

**முருக்கேரி கிராமத்தில் விவசாய கருத்தரங்கம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 01,2011,01:22 IST

மரக்காணம் : மரக்காணம் அடுத்த முருக்கேரியில் விவசாய கருத்தரங்கம் நடந்தது.திண்டிவனம் லஷ்மி விலாஸ் வங்கி கிளை மேலாளர் ஜானகிராமன் தலைமை தாங்கினார். பிரம்மதேசம் சப்-இன்ஸ்பெக்டர் ராஜாராம் முன்னிலை வகித்தார். பேராசிரியர் தண்டபாணி, சயின்டிபிக் மண்டல மேலாளர் ராஜ்குமார், உரக்கடை உரிமையாளர்கள் பாண்டியன், வைத்தியலிங்கம் உட்பட பலர் பேசினர்.கருத்தரங்கில் நெல், மணிலா, தர்பூசணி பயிர்களில் நோய் ஏற்படுவதை தடுத்தல் மற்றும் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்துவது குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. முருக்கேரி, ஆலங்குப்பம், நகர், முன்னூர் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் கலந்துக் கொண்டனர். யுவராஜ் நன்றி கூறினார்.

**கால்நடை சிகிச்சை முகாம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 01,2011,01:26 IST

சிறுபாக்கம் : சிறுபாக்கம் அடுத்த ரெட்டாக்குறிச்சி ஊராட்சியில் நீர்வள, நில வள திட்டம் சார்பில் கால்நடை மருத்துவ முகாம் நடந்தது. ஊராட்சி தலைவர் அய்யாசாமி தலைமை தாங்கினார். துணைத் தலைவர் பெரியசாமி முன்னிலை வகித்தார். முகாமில் டாக்டர்கள் நந்தகுமார்,

சுப்ரமணியன், கார்த்திகேயன், கண்மணி உள்ளிட்ட குழுவினர் கால்நடைகளுக்கு சிகிச்சையளித்தனர்.
இதில் மலடு நீக்கம், அடைப்பான் தடுப்பூசி, சினையூட்டல், குடற்புழு நீக்கம் உள்ளிட்ட நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டன. முகாமில் பசுக்கள், வெள் ளாடுகள், செம்மறி ஆடுகள் உட்பட 1,043 கால்நடைகளுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. கால்நடை ஆய்வாளர்கள் சுப்ரமணியன், உமாபதி, வேல்முருகன் உட்பட விவசாயிகள் பங்கேற்றனர்.

**கூடுதலாக 15 நெல் கொள்முதல் மையம் திறக்க முடிவு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 01,2011,02:42 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் கூடுதலாக நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க வேண்டும் என, வேளாண் குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர். "மாவட்டத்தில் கூடுதலாக 15 இடங்களில் நெல் கொள்முதல் மையம் திறக்கப்படும்' என, அதிகாரிகள் தெரிவித்தனர். ஈரோடு கலெக்டர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்டரங்கில், வேளாண் குறைதீர் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் குமரவேல் பாண்டியன் தலைமையில் நடந்தது. விவசாய சங்க பிரதிநிதிகள் பேசிய விபரம்: கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் நல்லசாமி: கீழ்பவானி வாய்க்காலின் கொள்ளளவை கூட்ட வேண்டும். கடலை பயிரிட்டுள்ளதால், தண்ணீர் திறப்பு தேதியை அறிவிக்க வேண்டும். நெல் கொள்முதல் நிலையங்களை கூடுதலாக திறக்க வேண்டும். பொதுப்பணித்துறை அதிகாரி: கீழ்பவானி வாய்க்காலின் கொள்ளளவை அதிகரிப்பது தொடர்பாக அரசிடம் சிபாரிசு செய்யப்படும். தண்ணீர் திறந்து விடுவதற்கான தேதி விரைவில் அறிவிக்கப்படும்.

நுகர்வோர் வாணிபக் கழக அதிகாரி: ஈரோடு மாவட்டத்தில் தற்போது ஒன்பது நெல் கொள்முதல் நிலையங்கள் உள்ளன. மேலும் 15 இடத்தில் கொள்முதல் நிலையம் துவக்கப்படும். மேட்டூர் வலதுகரை வாய்க்கால் சங்கத் தலைவர் மோகன்: பவானி-மேட்டூர் சாலை மிகவும் மோசமாக உள்ளது. இப்பகுதியில் எள் பயிரிடப்பட்டுள்ளது. தண்ணீர் திறக்க வேண்டும். தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தலைவர் பெரியசாமி: விவசாயிகள் பயிர்க்கடன் மற்றும் டிராக்டர்கள் வாங்கியதற்கான சலுகை தேதியை நீட்டிக்க வேண்டும். சில இடத்தில் விவசாயிகளின் டிராக்டர்களை வங்கி அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

இதை மீண்டும் விவசாயிகளிடம் திருப்பித்தர வேண்டும். தடப்பள்ளி அரக்கன்கோட்டை பாசன சங்கத் தலைவர் தளபதி: ஈரோடு மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் மூன்று சர்க்கரை ஆலைகளில் அரவைக்கு கரும்பை தருகின்றனர். ஒவ்வொரு ஆலையும் ஒரு விலையை வைத்துள்ளது. மூன்று ஆலைகளும் ஒரே விலையை அறிவிக்க வேண்டும். ஆலை நிர்வாகம் தன்னிச்சையாக செயல்படுகிறது. நெல் கொள்முதல் விலையை அரசு அறிவிக்கவில்லை. இரவு நேரத்தில்

கர்நாடகாவில் இருந்து நெல் விதைகள் லாரி மூலம் இங்கு கொண்டு வரப்படுகிறது. கள்ளிப்பட்டி - கோபி பாலம் அருகே இணைப்பு சாலை இல்லாததால், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் அவதிப்படுகின்றனர். இதுதொடர்பான செய்தி "காலைக்கதிர்' நாளிதழில் வெளியிடப்பட்டுள்ளது (நாளிதழை டி.ஆர்.ஓ,.விடம் தளபதி கொடுத்தார்.). டி.ஆர்.ஒ.,: கலெக்டரிடம் கூறி ஒரே விலையை அறிவிக்கவும், முத்தரப்பு கூட்டத்தை நடத்தவும் முடிவு செய்யப்படும். திருட்டுத்தனமாக நெல் விதை கொண்டு வருவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். கள்ளிப்பட்டி - கோபி பாலம் பகுதியை பார்த்துள்ளேன். அந்த இடத்தில் உள்ள இணைப்பு சாலை சீரமைக்கப்படும். இவ்வாறு விவாதம் நடந்தது.

**துரத்துது துவரம் பருப்பு விலைபறக்குது பாமாயில் விலை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 01,2011,21:55 IST

விருதுநகர்:வெளிநாடுகளில் இருந்து பாமாயில் இறக்குமதி குறைவு காரணமாக, விருதுநகர் மார்க்கெட்டில் பாமாயில் விலை டின்னுக்கு 20 உயர்ந்து 950 ரூபாயாக உள்ளது. சர்க்கரை விலை மூடைக்கு 20ம், துவரம் பருப்பு 100 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. மிளகாய் வத்தல் குவிண்டாலுக்கு 500 ரூபாய் உயர்ந்துள்ளது.விருதுநகரில் சர்க்கரை விலை மூடைக்கு 3075லிருந்து 3,095 ரூபாயாக உயர்ந்துள்ளது. கடலெண்ணெய் டின்னுக்கு 1,200 ஆகவும் சூரியகாந்தி எண்ணெய் 750 லிருந்து 760 ஆகவும் உள்ளது.

மலேசியா, இந்தோனேசியாவிலிருந்து இறக்குமதி குறைந்துள்ளது. படிப்படியாக விலை உயர்ந்து பாமாயில் 950 ரூபாயாக உள்ளது. நிலக்கடலைப் பருப்பு 3,600 ஆகவும், 2,700 ஆக இருந்த கடலைப் புண்ணாக்கு 2,600 ரூபாயாகவும் உள்ளது.உளுந்து விலை மூடைக்கு 4,500 லிருந்து 4,600 வரையும், சுமார் ரகம் 3,900லிருந்து 4,000 வரையும், பர்மா பருவட்டு 4,600 ரூபாயாகவும் உள்ளது. நயம் உளுந்தம் பருப்பு 5,900 லிருந்து 6,000 ஆகவும், பொடி உளுந்தம் பருப்பு 5,100 லிருந்து 5,300 ஆகவும் பர்மா பருவட்டு 5,900 லிருந்து 6,000 ரூபாயாகவும் உள்ளது. துவரை 3,400 ரூபாயாக உள்ளது. பொடி துவரை 3,000 ஆகவும், துவரம் பருப்பு 5,600 ஆகவும், பொடி துவரம் பருப்பு 4,700 ரூபாயாக உள்ளது.

பாசிப்பயறு 4,600 ரூபாயிலிருந்து 4,700 வரையும், சுமார் ரகம் 3,500லிருந்து 4,000 ஆகவும், பாசிப்பருப்பு 5,800 லிருந்து 5,900 ஆகவும், சுமார் ரகம் 5,500 ரூபாயாகவும் உள்ளது. கொண்டைக்கடலை 2,780 லிருந்து 2,760 ஆக குறைந்துள்ளது. பொரிகடலை 2,110லிருந்து 2,120 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.சம்பா மிளகாய் வத்தல் விலை, குவிண்டாலுக்கு 3,500 ரூபாயிலிருந்து 4,000 வரையும், சங்கரன்கோவில் வத்தல் 5,500 லிருந்து 6,000 வரையும்

உயர்ந்துள்ளது. முண்டு வத்தல் 4,500 லிருந்து 5,000 ரூபாய் வரையும் உள்ளது. புது சோடை வத்தல் 2,500 ரூபாயாகவும், பழைய சோடை வத்தல் 2,000 ரூபாயாகவும் உள்ளது.

**தஞ்சை மாவட்ட வெள்ள நிவாரண பணிகள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 01,2011,02:02 IST

தஞ்சாவூர்: தஞ்சாவூர் கலெக்டர் அலுவலகத்தில் உள்ள தேசிய தகவல் மையம் கான்ஃபரன்ஸ் காலில் சென்னையில் இருந்து முதல்வர் கருணாநிதி, துணை முதல்வர் ஸ்டாலின், தலைமை செயலர் மாலதி ஆகியோர் கலெக்டர் சணமுகம் மற்றும் அலுவலர்களுடன் வெள்ள நிவாரண பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர். ஆய்வின் போது தஞ்சாவூர் மாவட்டத்தில் இது வரை மேற்கொள்ளப்பட்டுள்ள வெள்ள நிவாரணப் பணிகள் குறித்து கலெக்டர் சண்முகம் தெரிவித்தாவது: இம்மாவட்டத்தில் வெள்ள நிவாரண பணிகள் மேற்கொள்ள ரூபாய் 29 கோடியே 40 லட்சம் அரசின் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. நடப்பாண்டு சராசரி மழையளவை விட அதிக அளவாக 485 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. இருந்தாலும் பொதுப்பணித்துறை மூலம் முதல்வர் ஒதுக்கீடு செய்த ரூபாய் நான்கு கோடியே 75 மதிப்பில் தூர் வாரும் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டதால் பாதிப்புகளின் அளவு கட்டுப்படுத்தப்பட்டிருந்து.

இருந்தாலும் மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் 27 ஆயிரத்து 695 ஹெக்டேரிஸ் நெற்பயிர் பாதிப்பு ஏற்பட்டது. மாவட்டத்தில் சம்பா மற்றும் தாளடி பருவத்தில் நடுவு செய்யப்பட்ட ஒரு லட்சத்து 38 ஹெக்டேரில் 19 சததவீகிதம் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. விவசாயிகள் பயிர் காப்பீடு திட்டத்தில் ஒரு லட்சத்து 9,378 ஹெக்டேர் நெற்பயிர்க்கு ரூபாய் மூன்று கோடியே 50 லட்சம் காப்பீட்டு தொகை கிடைக்க வாய்ப்புள்ளது. தற்போது அரசு வழங்கியுள்ள நிவாரணத் தொகையில் இருந்து முழுமையாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நெற்பயிர்க்கு ஹெக்டேருக்கு ரூபாய் பத்தாயிரம் வீதமும் மற்ற பயிர்களுக்கு ஹெக்டேருக்கு ரூபாய் ஏழாயிரத்து 500 வீதமும் வங்கிகள் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் பதினொரு மனித உயிரிழப்பு ஏற்பட்டதுக்கு ரூபாய் 22 லட்சம் நிவாரணத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த ஆயிரத்து மூன்று கால்நடைகளுக்காக ரூபாய் 26 லட்சத்து 35 ஆயிரம் நிவாரணத்தொகை வழங்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட ஏழாயிரத்து 724 குடிசைகளுக்கு ரூபாய் ஒரு கோடியே 93 லட்சத்து பத்தாயிரமும், முழுவதும் பாதிக்கப்பட்ட 208 குடிசைகளுக்கு ரூபாய் பத்து லட்சத்து 40 ஆயிரம் நிவாரணம் தொகையாக வழங்கப்பட்டதுள்ளது. அரசு வழங்கிய வெள்ள நிவாரண சீரமைப்பு பணிக்கான நிதி ஒதுக்கீட்டில் இருந்து ரூபாய் நான்கு கோடி

மதிப்பில் நெடுஞ்சாலைதுறை பணிகளும், ரூபாய் நான்கு கோடியே 50 லட்சம் மதிப்பில் பொதுப்பணித்துறை மூலம் 464 பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சி பகுதிகள் சீரமைப்புக்காக ரூபாய் ஒரு கோடியே 31 லட்சம் மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 495 கிராம பஞ்சயத்துகளில் ரூபாய் 14 கோடியே 32 லட்சம் மதிப்பில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இனி வருங்காலங்களில் பொதுப்பணித்துறை மூலம் தூர்வாரும் பணிகளை காலதாமதம் இல்லாமலும் உடனுக்குடன் செய்வதுக்காக ஏதுவாக பொக்லைன் இயந்திரங்கள் வழங்க வேண்டும். இதன் மூலம் ஆறுகளில் தண்ணீர் நிறுத்தப்பட்டவுடன் தூர்வாரும் பணிகள் விரைவாக மேற்கொள்ளலாம் என கலெக்டர் சண்முகம் தெரிவித்தார். ""முதல்வர் கருணாநிதி வெள்ள நிவாரண பணிகளை கலெக்டர் துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என்றும், வெள்ளப் பாதிப்பினால் ஏற்பட்ட உயிரிழப்பு நிவாரணப் பணிகளுக்கு இலக்கு இல்லாமல் அனைவருக்கும் நிவாரண உதவிகள் உடனுக்குடன் வழங்க வேண்டும்," என தெரிவித்தார். டி.ஆர்.ஓ., சுரேஷ்குமார், திட்ட இயக்குனர் தனசேகரன், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் சாந்தி, வேளாண்மை துணை இணை இயக்குனர் லோகநாதன் உட்பட அதிகாரிகள் பங்கேற்றனர்.

## *உலகில் தேயிலை பற்றாக்குறை 13 கோடி கிலோவாக அதிகரிக்கும்*



*சுதானுகா கோசல்*

கொல்கத்தா

நடப்பு 2011–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள், உலக அளவில் தேயிலை பற்றாக்குறை 13 கோடி கிலோவாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, சர்வதேச சந்தையில் தேயிலை விலை அதிகரிக்கும் நிலை உருவாகியுள்ளது. சென்ற ஆண்டு செப்டம்பர் மாதத்தில், உலகின் தேயிலை பற்றாக்குறை 11 கோடி கிலோவாக இருக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. தற்போதைய மதிப்பீடுகள் பற்றாக்குறை மேலும் அதிகரிக்கும் என தெரிவித்துள்ளன.

உற்பத்தி சரிவடையும்

ஏப்ரல் மாதம் தொடங்கும் பருவத்தில், இந்தியாவில் மட்டும் தேயிலை உற்பத்தியில் 8 முதல் 10 கிலோ வரை சரிவு ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் நம் நாட்டிலும் மொத்த, சில்லரை விற்பனை சந்தைகளில் தேயிலை விலை உயரும் என இத்துறையைச் சேர்ந்த வட்டாரங்கள் தெரிவித்தன. நாட்டின் தேயிலை உற்பத்தியில் அசாம் மாநிலத்தின் பங்களிப்பு 50 சதவீதமாக உள்ளது. அங்கு தற்போது ஒரு கிலோ தேயிலை விலை ரூ.150 என்ற அளவில் உள்ளது. இது, ஏப்ரல் மாதத்திற்குள் ரூ.180–ஆக உயரும் என கணிக்கப்பட்டுள்ளது.

இந்திய தேயிலை வாரியம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களின்படி 2010–ஆம் ஆண்டில் ஜனவரி முதல் அக்டோபர் வரையிலான பத்து மாதங்களில் நாட்டின் தேயிலை உற்பத்தி 81.30 கோடி கிலோவாக குறைந்துள்ளது. இது, முந்தைய ஆண்டின் இதே காலத்தில் 83 கோடி கிலோவாக இருந்தது. இந்நிலையில் தேயிலை உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் கென்யா, இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் இவ்வாண்டில் உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரிக்கும் என்று கூறுவதற்கில்லை என ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

இந்தியா 2–வது இடம்

சென்ற ஆண்டு ஜனவரி–நவம்பர் மாத காலத்தில் கென்யாவில் தேயிலை உற்பத்தி 9 சதவீதம் சரிந்து 28 கோடி கிலோவாக குறைந்துள்ளது. இதே காலத்தில் இலங்கையில் 26.38 கோடி கிலோ தேயிலை உற்பத்தியாகி உள்ளது. இது, முந்தைய ஆண்டை விட 12 சதவீதம் குறைவாகும். ஆசியாவில், தேயிலை உற்பத்தியில் சீனா முதலிடத்திலும், இந்தியா இரண்டாவது இடத்திலும் உள்ளன. சென்ற ஆண்டில், நாட்டின் தேயிலை உற்பத்தி 95–96 கோடி கிலோவாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## குன்னூர் பகுதி தொழிற்சாலைகளில் பச்சை தேயிலைக்கு மாத விலையாக ரூ.10 நிர்ணயம் சிறு விவசாயிகள் அதிருப்தி

*குன்னூர், ஜன.3–*

*குன்னூர் பகுதி தேயிலை தொழிற்சாலைகளில் பச்சை தேயிலைக்கு மாத விலையாக ரூ.10.50 நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது. இது சிறு தேயிலை விவசாயிகள் இடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.*

*தேயிலை விவசாயிகள்*

*நீலகிரி மாவட்டத்தின் பொருளாதாரம் தேயிலை தொழிலை நம்பி உள்ளது. மாவட்டத்தில் உள்ள 60 ஆயிரம் தேயிலை விவசாயிகள் தங்கள் தேயிலை தோட்டத்தில் விளையும் பச்சை தேயிலையை மாவட்டத்தில் இயங்கும் சிறு தேயிலை தொழிற்சாலைகள் மற்றும் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கு வழங்கி வருகிறார்கள்.*

*இவ்வாறு வழங்கப்படும் பச்சை தேயிலைக்கு வார விலை என்றும், மாத விலை என்றும் இரு விலைகள் வழங்கப்படுகிறது. வாரவிலை என்பது வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய இரு நாட்களில் நடைபெறும் தேயிலை ஏலத்தின் விற்பனை விலையை அடிப்படையாக கொண்டு நிர்ணயம் செய்யப்படுகிறது.*

*3 வகையாக பிரிப்பு*

*இந்த 4 வார விலைகளின் சராசரி கணக்கிடப்பட்டு, மாத விலை நிர்ணயம் செய்யப் படுகிறது. தேயிலை வாரியத் தின் அறிவுரையின் படி தேயிலை தர மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பச்சை தேயிலை 3 வகையாக பிரிக்கப் படுகிறது.*

*இரண்டு இலைகளுடன் கூடிய ஒரு அரும்பு ஏ கிரேடு என்றும், 3 இலை ஒரு அரும்பு பி பிளஸ் என்றும், மற்ற வகை பச்சை தேயிலை சாதாரண வகை என்று பிரிக்கப்படுகிறது. ஏ கிரேடு பச்சை தேயிலை மூலம் தரமான தேயிலை தூள் உற்பத்தி செய்வதால், இந்த தேயிலை தூளுக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது.*

*ஏ கிரேடு பச்சை தேயிலை*

*இதனால் ஏ கிரேடு பச்சை தேயிலைக்கு அதிக விலை கிடைத்து வருகிறது. ஏ கிரேடு பச்சை தேயிலையை பறிக்க வேண்டுமென்றால் தோட் டத்தை நன்கு பராமரிக்க வேண்டியது உள்ளது.*

*பச்சை தேயிலையின் விலை ஏற்ற, இறக்கத்தால் சிறு விவசாயிகளால் ஏ கிரேடு பச்சை தேயிலையை அதிகளவு பறிக்க முடிவது இல்லை. பெரும்பாலான தேயிலை விவசாயிகள் பி பிளஸ் கிரேடு பச்சை தேயிலையை பறித்து வருகிறார்கள்.*

சீதோஷ்ண நிலை

இந்த நிலையில் நீலகிரி மாவட்டத்தில் தற்போது நிலவி வரும் சீதோஷ்ண நிலை காரணமாக பச்சை தேயிலை யின் மகசூல் பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால் தேயிலை தூள் உற்பத்தியும் கணிசமான அளவு குறைந்துள்ளது.

கடந்த 1–ந் தேதி சனிக் கிழமை குன்னூர் பகுதிகளில் உள்ள தேயிலை தொழிற்சாலை களில் பச்சை தேயிலையின் வார விலையாக ஏ கிரேடு இலைக்கு 18 ரூபாய் என்றும், பி பிளஸ் கிரேடு பச்சை தேயிலைக்கு 14 ரூபாய் என்றும், சாதாரண வகை பச்சை தேயிலைக்கு 11 ரூபாய் 50 காசு என்று வார விலையாக விலை நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. ஆனால் மாத விலையாக பச்சை தேயிலைக்கு 10 ரூபாய் 50 பைசா என்று விலை நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. பொதுவாக வார விலையை விட மாத விலை தான் அதிகமாக இருக்கும்.

ஆனால் கடந்த டிசம்பர் மாதத்தில் வழங்கப்பட்ட பச்சை தேயிலைக்கு 10 ரூபாய் 50 பைசா என்று விலை நிர் ணயம் செய்துள்ளது தேயிலை விவசாயிகளுக்கு அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

# பூத்து குலுங்கும் லில்லி பூக்கள்



கொலக்கம்பை அருகே தூதூர்மட்டத்தில் தற்போது பனிப்பொழிவு அதிகமாக காணப்படுகிறது. இதனால் இப்பகுதிகளில் உள்ள மலர்ச்செடிகள் மற்றும் காய்கறி செடிகள் கருகி வரும் நிலையில் பனியின் தாக்கத்தில் இருந்து தப்பித்த லில்லி பூக்கள் அழகாக பூத்து குலுங்குகிறது.